1000 Copies
First Edition.

உ
சிவமயம்.

Pamphlet
No 1.

# புராணம்.

இது

கொழும்புச்

சைவப்பிரகாசசபையாரால்

யாழ்ப்பாணம்

சைவப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிட்டு

வெளிப்படுத்தப்பட்டது.

கரவருஷம் ஐப்பசிமீ.

October 1891

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

உ

சிவமயம்.

சைவசமயிகளுக்கோர்

# விண்ணப்பம்.

---

அன்பர்களே!

உலகத்திலே ஒருவன் பெறவேண்டிய பேறுகளெல்லாவற்றுள்ளும் தன் ஆன்ம இரட்சணியமே மிக மேலாகிய பேறாகும். இவ்வான்ம இரக்ஷணியம் உண்மைச்சமய அறிவினாலன்றிப் பெறுதல் கூடாது. இதைமறந்து நாமெல்லாம் நம்பொருளை, கோவிலு[illegible]டங்களிற் கோவில்[illegible]வும், மடங்களுள்ள இடங்களில் மடங்களையே பின்னு மமைப்பதிலும் செலவிடுகின்றோம். இச்செயல் எல்லாம் உண்மைச்சமய அறிவு இல்லாவிடத்து யாதொருபயனையும் கொடாவே. நம்பிள்ளைகளெல்லாம் பரசமயிகளாய் நம்தேசமும் பரசமயக்காடாய்விடின் நம் ஆலயங்களும் மடங்களுமிருந்தென் பயன். ஆகவே சமய அறிவை வளர்ப்பதே மிக மேலாகிய தருமம். இக்கருத்துப்பற்றியே இக்கொழும்பிலே இச்சைவப்பிரகாச சபை தாபிக்கப்பெற்று நடைபெற்று வருகின்றது. பரசமயிகளது வித்தியாசாலையிற் சென்று லௌகிக கல்விகளை நம்மக்கள் பெறவேண்டி யிருத்தலால் அவர்கள் தம் சமயநூற் பயிற்சியின்மை காரணமாகத் தம் சமயத்திலும் பாஷையிலும் கொண்ட விருப்பை மறந்து பரசமயப்பிரவேசஞ் செய்துவிடுகின்றார்கள். இவற்றை யோசித்து இச்சபையார் தமிழிலும் இங்கிலிசிலும் லௌகிக வைதிக கல்விகளை நம்பிள்ளைகள் கற்றுக்கொள்வதற் கேற்ற ஓர்கல்லூரி யமைப்பதற்காக யத்தனித்துப் பொருள்சேர்த்து வருகின்றார்கள். இத்தருமத்திற்கு நமது தேசத்தவராகிய நம்மவர் யாவரும் இயன்ற பொருளுதவி செய்யத் தக்கது. எத்தனையோ ஆலயங்கள் நம்தேசத்துள்ளன. இவற்றால் பெறும் வருமானத்தில் செலவுநீக்கி எஞ்சியபொருளில் அவ்வவ் வாதீனகர்த்தாக்கள் சிறிது சிறிது உபகரிப்பினும் பெருந்தொகை சேர்ந்துவிடுமே.

## விண்ணப்பம்.

சாதியாசாரம் சமய ஒழுக்கங்களில் ஒரேவகுப்பினராய் இந்
தியாதேசத்துள்ள மடாதிபதிகள், இராசாக்கள், பிரபுக்களாகிய
எவரும் உதவிசெய்யவேண்டியது. எத்தனையோ திருக்கோயில்க
ளுக்கும் திருமடங்களுக்கும் ஏராளமான பொருள்கொடுக்கும்
ஈசுரபத்தியுடையரான இராசாக்களும் பிரபுக்களும் இந்நன்முய
ற்சிக்குப் பெரிது முதவிபுரியாது விடார்கள்.

அன்னசத்திரங்களையும் புராதன சிவஸ்தலங்களையும் முறை
யே கட்டுவித்தும் புதுக்குவித்தும் பெரும்பொருள்கொண்டு தரு
மஞ்செய்யும் நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளும் இவ்
விசேஷ தருமத்திற் கியன்றபொரு ளுபகரியாது விடார்கள்.

இவ்வரிய முயற்சியைத் தொடங்கி இதற் குதவியாயிருக்கும்
பரோபகாரசிந்தையும் உதாரகுணமுமுடையர்களாகிய கௌரவ.
இராமநாதத்துரை அவர்களுக்கும் ஸ்ரீமான். அருணாசலத்துரை
அவர்க[illegible] [illegible]வர்களாய் இ[illegible]
[illegible] நாய் [illegible] இருக்கின்றோம்.
இந்நன்முயற்சியைச் சோரவிடாது முற்றுப்பெறச் செய்யின்,
இவர்கள் பெருமை அவியாக் கிரிதலைத் தீபம்போலப் பாராட்ட
த் தக்கதேயாம். பெருங்கருணைக் கடவுளாகிய சிவபெருமான் தி
ருவருள்புரிவாராக.

---

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

சிவமயம்.

# புராணம்.

புராணம் பதினெட்டு. அவையாவன:—சைவபுராணம், பவிஷியபுராணம், மார்க்கண்டேயபுராணம், இலிங்கபுராணம், காந்தபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், பிரமாண்டபுராணம், காருடபுராணம், நாரதீயபுராணம், வைணவபுராணம், பாகவதபுராணம், பிரமபுராணம், பதுமபுராணம், ஆக்கினேயபுராணம், பிரமகைவர்த்தபுராணம் என்பனவாம். அவற்றுள் சைவபுராணமுதல் பிரமாண்டபுராணம் இறுதியாகிய பத்தும் சிவபுராணங்கள். காருடபுராணமுதல் பாகவதபுராணம் இறுதியாகிய நான்கும் விட்டுணுபுராணங்கள். பிரமபுராணம் பதுமபுராணம் இரண்டும் பிரமபுராணங்கள். ஆக்கினேயம் அக்கினிபுராணம். பிரமகைவர்த்தம் சூரியபுராணம்.

சிவபுராணம் பத்தும் சாத்துவிகங்களாம்; விஷ்ணுபுராணம் நான்கும் தாமசங்களாம்; பிரமபுராணம் இரண்டும் இராசசங்களாம்; அக்கினிபுராணமும் சூரியபுராணமும் திரிகுணயுக்தமாம்.

பிரமவிஷ்ணுக்களுடைய பிறப்பு இறப்புக்கள், உலகசிருட்டிகள், பிரபஞ்சத்தினது விரிவுகள், சிவலிங்கத்தினின்று யாவும் உற்பத்தியாதல், சிவலிங்கவழிபாடு, புண்ணியகாலம், புண்ணியக்ஷேத்திரம், புண்ணியார்த்தம், பிரமவிஷ்ணுக்கள் சிவலிங்கவயத்தராயினமை, சிவலிங்கத்தைப் புஷ்பம்முதலிய உபகரணங்களாற் பூசித்தல், கைக்கொண்டு நடக்கவேண்டிய விதிகள், யோகாப்பியாசம், தீர்த்தமான்மியம், சிவபெருமானோடு இரண்டற்று விளங்கும் அத்துவிதமடைதலால் எய்தும் பூரணத்துவம், திரிபுராசுரர், தக்கன் யாகம், வைநாயக சுப்பிரமணியர் தோற்றம் முதலாயினவற்றை உணர்த்துவது இருபத்துநாலாயிரங் கிரந்தமுடைய சைவபுராணம்.

பிரமாவானவர் சூரியனுடைய மான்மியத்தை மனுவுக் குரைத்தபின்னர், அவர் அம்மனுவுக்கு அகோர கற்பத்திலே உலகமுளதா முறையையும், சிருட்டிபேத முதலியவைகளையும் உரைத்ததாக உணர்த்துவது முப்பத்தோராயிரங் கிரந்தமுடைய பவிஷியபுராணம்.

வியாசருடைய சீடராகிய சைமினிபகவான், முற்பிறப்பிலே பிராமணகுலத்தனவாயும் முற்பிறப்பிலெய்திய ஞான விசிட்டத்தினாலே வேதங்களிலே மிகுந்த சாமர்த்தியமடைந்தனவாயும் உள்ள இரண்டு பக்ஷிகளை நோக்கி, விஷ்ணுமூர்த்தி மானுடசரீரமெடுத்தமைக்குக் காரணம் யாது என்றும், தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவனென்னும்

பாண்டவரைவர்க்கும் பொதுவாகத் திரௌபதியம்மையார் என்னுமொருவரே மனைவியாக எய்துதற்குக் காரணம் யாது என்றும், பலராமர் மது மயக்கத்தினாலே தாம் செய்துகொண்ட பிரமகத்தி பாவநிவாரணத்தின்பொருட்டு இவர் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டியது எதுக்கு என்றும், திரௌபதியாருடைய புதல்வர் ஐவருக்கும் காத்தற் றலைவராயிருந்த கிருஷ்ணார்ச்சுனர் இருவருக்கும், அகாலமரணம் எய்துதற்குக் காரணம் யாது என்றும், வினாவிய நான்கு விசிட்ட வினாக்களின் உத்தர விவரணங்களை உணர்த்துவது, முப்பத்தீராயிரங் கிரந்தமுடைய மார்க்கண்டேய புராணம்.

அக்கினி கற்பத்திறுதியிலே சீவர்களடையும் சீலம் ஐசுவரியம் இன்பம் மோக்ஷம் என்பவைகளையும், அதி இரகசிய ஞானமயமாகிய சிவலிங்கங்களையும் விரித் துணர்த்துவது, பதினோராயிரங் கிரந்தமுடைய இலிங்கபுராணம்.

தற்புருஷகற்பத்திற் சம்பவங்களையும், அறுமுகக்கடவுளுடைய மான்மியத்தையும் விரித்துணர்த்துவது, இலட்சம் கிரந்தமுடைய காந்தபுராணம்.

விஷ்ணுவின் வாயிற் காவலாளராகிய ஜயவிஜயர் என்னும் இருவரும் ஓர்போது வைகுண்டலோகப் பிரவேசஞ் செய்யவந்த முனிவரொருவரைத் தடுத்தமையினாலே சாபமேற்று, பூமியிலே காசிபர் திதி என்பவர்களுக்குப் புதல்வராகப் பிறந்து, இரணியகசிப்பு இரணியாட்சன் எனப் பெயர்பெற்றமையையும், இவ்விருவரிலே, இரணியகசிப்பு மூவுலகங்களையும் செயித்தமையையும், இரணியாட்சன் நேரே சுவர்க்கத்துக்குப் போய்த் தேவர்களை வென்றமையையும், தேவர்கள் வராகவுருவமுற்றிருந்த விஷ்ணுமூர்த்தியை வேண்ட அவர் அவ்விரணியாட்சனைக் கொன்றமையையும், திதி என்பவளுக்கும் விட்டுணுவுக்கும் நடந்த யுத்தத்திலே திதி தோற்றமையையும், விட்டுணு வராக ரூபத்தைப் படிப்படியே நீக்கிக்கொண்டமையையும் உணர்த்துவது, இருபத்துநாலாயிரம் கிரந்தமுடைய வராகபுராணம்.

தக்கன் யாகம், இமயாசலத்திலே கேதாரேஸ்வர புரத்திலேயுள்ள சிவலிங்கப்பெருமானினதும் வதரிகாச்சிரமத்தினதும் மான்மியத்தை விளக்குதற் கெழுந்த காமதகனம், சரோமகாத்மியம், ஸ்தாணுதீர்த்த கோதாவரி தீர்த்தமான்மியம், உமாமகேஸ்வரர் விவாகம், முருகக்கடவுள் திருவவதாரம், மனுவந்தரசிருட்டி, சுவாரோச்சிஷ மனுவந்தரத்திலே இருந்த தைத்தியராசனாகிய பலிச்சக்கிரவர்த்தி பரிபாலனம், அப்பலியரசனை யடக்கக் கிளர்ந்த வாமனமூர்த்தி திருவவதாரம் என்னும் இவைகளை யுணர்த்துவது, பதினாலாயிரம் கிரந்தமுடைய வாமனபுராணம்.

விஷ்ணுவினது மீனவதார மான்மியமும், அவ்விஷ்ணு சலப்பிரளய காலத்திலே மனுவையும் பிறவற்றையும் ஓர்பேழையினுள்ளே வைத்து இரக்ஷித்தமையும், பிரமசிருட்டியும், திரிபுரத்தரசர் சங்காரமும், தாரகாசுரனுக்கும் தேவர்களுக்கும் இடையினிகழ்ந்த யுத்தமும், பார்ப்பதியம்மையார் திருக்கல்யாணமும், முருகக்கடவுள் திருவவதாரமும்,

விஷ்ணுவவதாரமுமாகிய காதைகளை யுணர்த்துவது பதினாலாயிரங் கிரந்தமுடைய மற்சபுராணம்.

ஆமைவடிவங்கொண்ட சனார்த்தனர், சக்கிரன் சமீபத்திலே இருந்த இருஷிகளுக்கும், அவந்திதேசத் தரசராகிய இந்திரத்தியுமனருக்கும், ஜீவர்கள் அத்தியாவசியக மடையவேண்டிய அறம், பொருள், இன்பம், மோக்ஷம் என்பனவற்றை மொழிந்ததாக வுணர்த்துவது, ஆறாயிரம் கிரந்தமுடைய கூர்மபுராணம்.

பிரமாவானவர் பிரம அண்டத்தின் மகிமையையும், இனிவருங் கற்பங்கடோறு நிகழும் காதைகளையும் சொல்லியதாக உணர்த்துவது, பன்னீராயிரங் கிரந்தமுடைய பிரமாண்டபுராணம்.

உலகசிருட்டிச் சுருக்கவிளக்கம், விரதவிவரணம், சமயாசரணம், சோதிடம், புண்ணியக்ஷேத்திரம், சாமுத்திரிகாலக்ஷணம், விலையுயர்ந்த ரத்தினம், ஔஷதம் முதலியவற்றை யுணர்த்துவது, ஆறாயிரம் கிரந்தமுடைய காருடபுராணம்.

விஷ்ணுவின்பொருட்டுத் துதிக்கப்பட்ட தோத்திரங்களையும், அவரை ஆராதனை செய்தற்குரிய புண்ணியகாலங்களையும், துருவர் பிரகிலாதர் காதைகளையும், உருக்குமாங்கடர் புதல்வியாகிய மோகினிஎன்பவளது காதைகளையும் உணர்த்துவது, இருபத்தையாயிரம் கிரந்தமுடைய நாரதீயபுராணம்.

உலகசிருட்டியையும், பிரமாவுடைய புதல்வர்களாகிய மரீசி அத்திரி ஆங்கீரஸ் புலத்தியர் புலகர் கிரது வசிட்டர் தட்சர் பிருகு என்னுமிவர்களாலேஜீவர்கள் உலகத்திலே படைக்கப்பட்டுப்பெருகினமையையும்,கற்பகாலத்திறுதியிலே நிகழும் சங்காரத்தையும், பிரதிசாக்கத்தையும், மனுவந்தரத்துள்ள அரசர் பரிபாலனங்களையும், உணர்த்தும் அம்சம்; பலவகைப்பட்ட உலகங்களையும், கிரக மண்டலங்களையும், சப்த கண்டங்களையும், அவற்றைச் சூழ்ந்த சப்தசாகரங்களையும், விளக்கும் அம்சம்; வியாசபகவான் வேதபுராண இதிகாசங்களை ஒழுங்குபெற அமைத்த வகைகளையும், சாதி ஒழுக்கங்கள் முதலியவற்றையு முணர்த்தும் அம்சம்; அரசர்களுடைய பரிபாலனங்களையும், அவர்கள் இராச்சியங்களையும் விரித்துணர்த்தும் அம்சம்; கிருஷ்ணருடைய சரித்திரத்தை முழுமையும் உணர்த்தும் அம்சம்; கிரேதாயுகமுதல் கலியுகம்வரையினும் மனிதர் படிப்படியே தீச்செயல்களிலே தலைப்பட்டு அவற்றாலெய்தும் சலப்பிரளய அக்கினிப் பிரளயங்களினாலே அழிந்து கற்பகாலத்திறுதியி லெய்தும் உலக ஒழிவையும் உணர்த்தும் அம்சம் என ஆறு அம்சங்களை யுடையது, ஆறாயிரம் கிரந்தமுடைய வைணவபுராணம்.

அத்தினாபுரத் தரசரும், அருச்சுனருடைய பேரருமாகிய பரீக்ஷித்து என்பவர், ஓர் சாபத்தினாலே தாம் ஏழுதினங்களுக்குள்ளே சர்ப்பந் தீண்டப்பெற்று இறந்துவிடுவேமென்று அத்தினாபுரத்தை விடுத்துக் கங்காதீரத்தை யடைந்து, முனிவர்கூட்டத்தோடு அங்கெழுந்தருளியிருந்த வியாசமுனிவர் புதல்வராகிய சுகமுனிவரை நோக்கி, முனிவர்பெருமானே! அடியேன் மரணயாதனையை ஒழிக்கும்வகை யாது? என்று வினா

விய வினாவுக்கு விடுக்கப்பட்ட விடைகளைப் பன்னிரண்டு ஸ்கந்தங்கள் வாயிலாக உணர்த்துவது, பதினெண்ணாயிரம் கிரந்தமுடைய பாகவதபுராணம்.

உலகசிருட்டியையும், மநுவந்தரங்களையும், கிருஷ்ணர் வரைக்குமிருந்த சூரிய சந்திரகுலத்து அரசர்களையும், சூரியன்பொருட்டும் சிவபெருமான்பொருட்டும் சகநாதர்பொருட்டும் உள்ள திருக்கோயில்களையும், திருநந்தனவனங்களையும், சகநாதமான்மியத்தையும் உணர்த்துவது, பதினாயிரம் கிரந்தமுடைய பிரமபுராணம்.

உலகசிருட்டி செய்யும்பொருட்டுப் பிரமாவானவர், ஓர் பதுமத்திலே தோற்றிய கதைகளை உணர்த்தும் சிருட்டிகாண்டம்; எல்லோருஞ் சென்று தரிசனஞ் செய்வதற்கும், ஸ்நானஞ்செய்வதற்கும் உரிய ஆலயங்களையும் தீர்த்தங்களையும் மனைவியாகவும் தாய் தந்தையராகவும் குருவாகவும் உவமித்துக் கூறும் பூமிகாண்டம்; பூமியை மத்தியாகக்கொண்டு அதற்குமேலுள்ள அண்டங்களை விரித் தறிவிக்கின்ற சுவர்க்ககாண்டம்; நாகருலகங்களையும் பிறவற்றையு முணர்த்தும் பாதலகாண்டம்; திலிபமகாராசாவுக்கும் வசிட்டமுனிவருக்கும் இடையில் நிகழ்ந்த வாதவிஷயங்களாகிய மாகமாசத்துத் தீர்த்தமாடற் புண்ணியங்களையும், இலக்குமிநாராயணர்பொருட்டுச் செபிக்கற்பாலனவாகிய மந்திரமுதலியனவற்றையுமுணர்த்தும் உத்தரகாண்டம் என்னும் ஐந்து காண்டங்களால் புனையப்பட்டது, ஐம்பத்தையாயிரம் கிரந்தமுடைய பதுமபுராணம்.

விஷ்ணுவின் அவதாரங்களையும், சிவபெருமானை நோக்கிச் செய்யும் ஞானபூசையையும், பிரபஞ்ச விவரணங்களையும், அரசர் கடன்களையும், உணர்த்துவது, எண்ணாயிரங் கிரந்தமுடைய ஆக்கினேயபுராணம்.

கிருஷ்ணர் மகிமையையும் பிரமவராகர் கதையையும் உணர்த்துவது, பன்னீராயிரம் கிரந்தமுடைய பிரமகைவர்த்தபுராணம்.

இப்பதினெண்புராணங்களுள் சிவபுராணங்கள் குற்றமுறாது மேன்மையனவாம். வேதங்களே அவைகளுக்குச் சாட்சியாகும். சிவபுராணங்களையொழித்து ஒழிந்த புராணங்கள், குற்றத்தை நீக்கிக் குணத்தை விரித்து, இல்லாதனவற்றையும் முகமனாகவெடுத்துரைக்கும். ஆதலினால் பிறபுராணங்களைப் படிப்பதினாலே மயக்கம் நீங்காது, சிவபுராணங்களைப் படிப்பதினாலேதான் தெளிவு பிறக்கும்.

சிவபுராணம் சிவபெருமானை உத்கர்ஷமாகவும், விஷ்ணுபுராணம் அவரை அபகர்ஷமாகவும், விஷ்ணுபுராணம் விஷ்ணுவை உத்கர்ஷமாகவும், சைவபுராணம் அவரை அபகர்ஷமாகவும் சொல்வதற்குச் சமாதானம் என்னையெனிற் கூறுதும்:—சைவபுராணங்களெல்லாம் செப்புகின்ற விஷ்ணு அபகர்ஷம் விஷ்ணுவையே சாரும் என்றும், சைவபுராணங்கள் செப்புகின்ற சிவோத்கர்ஷம் சிவபெருமானையே சாருமென்றும், வைணவபுராணங்கள் செப்புகின்ற விஷ்ணு உத்கர்ஷம் அவருக்கு அந்தரியாமியாயுள்ள சிவபெருமானையே சாருமென்றும், வைணவபுராணங்கள் செப்புகின்ற சிவ அபகர்ஷம் உருத்திரரைச் சாருமென்றும் பராசரபுராணம் கூறுமாற்றால் அறிக. அறியவே சிவபுராணங்கள் பத்தும் உருத்திரமூர்த்தியை யதிட்டித்துநிற்கும் துரியமூர்த்தியாகிய சிவபிரான்

பரத்துவத்தை விளக்குமாறுபோல, விஷ்ணுபுராணமும் உருத்திரமூர்த்தியின் இயற்றுதற் கர்த்தாவாகிய விஷ்ணுவை அதிட்டித்து நிற்கும் சிவபிரான் பரத்துவத்தையே கூறும் என்பதும், ஏனையபுராணங்களும் அவ்வாறு சிவபரத்துவத்தையே விளக்கும் என்பதும், அதனால் விஷ்ணுபுராணாதிகள் அவ்வவ் வதிஷ்டேய தேவர்களை உபசாரம்பற்றிப் பரமாகக் கூறும் என்பதும், தெளிவாகச் சிந்தித்தவாறுமயிற்று.

இப்புராணங்கள், கடவுளிலக்கணத்துக்கு மாறுதலையாயுள்ள பல சரித்திரங்களை எடுத்துக்கூறும் என்றும், சாத்திரக்கொள்கைக்கு விருத்தமான பல அபத்தக் கோள்களை விரித்தோதுமென்றும், அறிவுடையோரால் நம்புதல் கூடாத பல அசம்பவ சரித்திரங்களைப் பாராட்டிப் பொழுதுபோக்கும் என்றும்; பெண்கள் சிறுவர் என்றுள்ள இன்னோர் முன்னிலையில் வாசித்தற் கருகமல்லாத பல குற்சித சரித்திரங்களைக் கூசாது பேசும் என்றும் சொல்லி யானைகண்ட குருடரையொத்துப் புராணவாக்கியங்களைப் பலவாறு விளங்கி ஆக்ஷேபந் தொடுப்பர்.

இவ்வாக்ஷேபங்களுக்குச் சமாதானம் கூறத் துணியுமுன்னர் நாம் சொல்லத்தக்க சிலவுண்டு. இக்காலத்துள்ளோரால் அநுசரிக்கப்படும் சாதிபேதங்கள் வேதாகமங்கள் தோற்றிய காலத்திலவென்பதும், அக்காலத்திற் பிரம சத்திரிய வைசிய சூத்திரரென்னும் [illegible]சாதிகளே வகுக்கப்பட்டிருந்தன வென்பதும், அவையும் பிறவி மரபானவையாது முறையே ஞானமும், புவிபுரக்கும் வன்மையும், இல்வாழ்வாரதுந் துறவிகளதும் யாக்கையை நிலைநிறுத்துதற்கு இன்றியமையா ஏதுக்களாகிய சீவனோபாய கிருஷிகங்களும், இவை ஒன்றினுக்கும் வழியில்லாமையால் மேற்கூறிய மூவகையினர்க்கும் தமது மனம் வாக்குக் காயங்களால் தொண்டுசெய்வாருடைய அடிமைத்தன்மையுங் காரணமாக ஏற்படுத்தப்பட்டனவென்பதும், இதுபற்றியே இச்சாதிகளுக்குப் பிறப்பிடமாக அவரவர் தொழிற் கியைபுபெறச் சிருட்டிகர்த்தாவாகிய பிரமாவினது சிரசும், புயமும், தொடையும், பாதமும் ரூபகமாகக் குறிப்பிக்கப்பட்டன வென்பதும் கற்றறிந்தோர் பெரும் பாலராற் கொள்ளப்பட்ட துணிபேயாம்.

ஞானாதிகாரிகளாகிய பிராமணரோ அக்காலத்தில் இந்தியாவின் வடபாகத்திலுள்ள கங்காதீரமுதலிய சிலவிடத்துமாத்திரம் வசித்த சொற்பத் தொகையினர். ஆயினும் வைதிக ஞானமும் லௌகிக கல்வியும் இச்சொற்பத் தொகையினராகிய பிராமணர் கைவசப்பட்டே யிருந்தன. அறிவீனத்தாலும், 'ஏவல்பூண்டொழுகும் தன்மையாலும், சுவாதீனக்குறைவாலும், பரதந்திரப்பட்டொழுகாநின்ற சூத்திரருக்கு வேதங்களையோதி யாராய்தற்றொழில் புறம்பாயிற்று. "அறிவிலார்க் குரைப்பவரவரிற் பேதை" என்ற முதுமொழிப்பிரகாரம் அவர்க்கு வேதவாக்கியங்கள் கற்பிப்பதும் விலக்கப்பட்டது. வேதவாக்கியமாத்திரமன்று; சூத்திருக்கோதியுபதேசிக்கப்படுந் தகைமைத்தான செப மந்திரங்களாமும் அவருள் அறிவாலாவது ஞானேச்சையினாலாவது பரிபக்குவதசை யடைந்தோர்க்கன்றி உபதேசிப்பதும் மறுக்கப்பட்டது. இயற்கையாக மனுஷர் அறிவுவிருத்தியில் விருப்பமுடையவர். ஆகவே சொற்பத்தொகையினராகிய பிராமணர் வசப்பட்ட வேதாகமங்களைப் பல்லாயிர மடங்

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

னொரகிய சூத்திரர் பலாற்காரமாயாவது பறிக்காமல் விடார். ஆதலால் சூத்திரர் தத்தம் முயற்சியால் லௌகிக சாத்திரத்தேர்ச்சியுடையராய், இம்மையறிவு முதிருங்காலத்து, வைதிகஞானத்திற்குப் பரிபக்குவமடையாமுன் வேதாகமங்களை ஓதி யாராய்தலிற் கையிடுதலை விலக்குதற்பொருட்டும், அவ்வேதாகமங்களால் உணர்த்தப்பட்ட பொருளைச் சூத்திரரெடுத்தோதினும் அவருள் ஞானமுதிர்ச்சி யுடையோர்க்கன்றி மற்றையோர்க்குப் புலப்படாதிருத்தற்பொருட்டும், ஈஸ்வரனை யறிந்து முத்திவழியொழுகிச் சிவானந்தமெய்துதற்குச் சூத்திரரும் அருகராதலில் அதிபரிபக்குவதசை யடைந்தோர்மாத்திரம் ஆகமப்பொருளை யோதியுணர மற்றையோர்க்கு வேதாகமப்பொருள் குறிப்புப்பொருளாய் உண்மறைந்து சொலிக்கவும் செம்பொருள் பிறிதொன்றாய் வெளிநின்றொலிக்கவும் புராணங்கள் கதைரூபமாக இயற்றப்பட்டன. இவை மெய்யென்பதும், ஓர்நூதன கருத்தன்றென்பதும் மாணிக்கவாசக சுவாமிகள் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் திருவாக்குக்களால் நன்குணரப்பெறும். சிவபெருமானால் நந்திதேவருக்கும், நந்திதேவரால் சனற்குமாரருக்குமாக உபதேசிக்கப்பட்டு வந்த புராணங்களினது இவ்வுண்மைப்பொருளை யறியாதார், புராணங்கள் வெறுங்கதையாமெனக்கொண்டு விபரீதார்த்தஞ்செய்து நிந்திப்பராமாதலின், இவற்றின் பொருள் குருமுகமாகவே யறிதற்பாலனவா மென்பதை நம்மனோர் அறிதற்பொருட்டே, சிவபெருமான் வேதவியாசனை [illegible] [illegible]க்கு நாலுவேதங்களும் ஒருவர் உணர்த்தா[illegible] ஆ[illegible]யும்போது அவை எனக்குத் தானேவந்திடும். புராணங்களை மாத்திரம் சனற்குமாரனிடத்திலே கேட்டறிகுதி" என்று அருளிச்செய்தார். புராணங்கள் வேதாகமங்களை யருளிச்செய்த சுத்த சைதன்னிய விமலமூர்த்தியாகிய பரமேசுரன் வாயினின்றே பிறந்தன. ஆதலின், புராணத்திலுள்ள வேதாகம சாரங்கள் அவ்வேதாகம வாராய்ச்சியுடைய சமயாசாரியர்களாற் பரிபக்குவகாலத் துணர்த்தப்பட்டாலன்றி, மற்றும்படி புலப்படாவாம். பாலருக்கும், ஞானோதயம் எய்தப்பெறாத மாந்தர்க்கும், அறிவிலாப் பெண்களுக்கும் விக்கிரகவணக்கம் தாபிக்கப்பட்டதும், சூத்திரருக்கும் ஸ்திரிகளுக்கும் புராணங்க ளளிக்கப்பட்டதும் ஒரே தன்மையுடையன. விக்கிரகத்தின் வெளிரூபமும் அதில் ஆவாகிக்கப்பட்ட ஈஸ்வரனும் போலவே புராணங்களின் செம்பொருளும் அவற்றிற் பொதிந்து மறைக்கப்பட்டிருக்கும் குறிப்புப்பொருளுமாமெனக்கொள்க. அன்றியும் பவப்பிணி தீர்க்கும் வேதாகம ஸ்மிருதிகளாதி ஔஷதங்களை அறிவிலாதாருடைய செவிகட் கினிய கதைகளாகிய சர்க்கரையிற் கலந்தூட்டும் பெருமை அறிவிற்சிறந்த எத்தேசத்தினர்க்கும் பொதுத்தருமமாம். அறிவிற் குறைவுடையார், பாலர், ஸ்திரிகள் முதலியோருக்கு இம்மையும் மறுமையும் நன்மை பயக்கத்தக்க தருமோபதேசங்கள் அமைக்கப்பெற்ற இனிய நவீன சங்கற்ப கதைகள் ஐரோப்பா அமரிக்காவிலுள்ள சற்சனர்களால் எத்தனையாயிரம் இயற்றப்பட்டிருக்கின்றன. பிரபோத சந்திரோதயம்போலச் சுத்த சங்கற்ப ரூபமா யியற்றப்படாது மெய்ச் சம்பவங்கள்போல வாசிப்போரை மயங்கச்செய்து கற்பிப்பது தர்மவிரோதமென்று சிலர் பகர்வர்போலும். அங்ஙனமன்று. பிரபோத சந்திரோதயம் இந்தியாவிலுள்ள பலசமயத் துணிபுகளையும் கற்றுணர்ந்த பெரியோர்க்கு விநோதம் பயக்கும்பொருட்டுச் செய்யப்பட்டது. மேலும் அது விஷயத்தில் மேலைத் தேசவாசிகளுக்கும் இந்துதேசத்தாருக்கும் பெரும் பேதங்கள் பலவுள.

புராணங்களைச் சுத்த சங்கற்ப ரூபமென வுணர்த்தின் பாஷாலங்காரம் முதலிய இம்மைப்பயனொன்றையே கருதி அவைகளைப் படிப்பாரன்றி மறுமைப்பயன் கருதியோத அவர்க் கூக்கஞ்செல்லா தொழிந்துவிடும். தருமநெறிகள் பொதியப்பெற்றனவாயினும் அங்கிலேய ருஷிய சர்மானிய பிராஞ்சிய பார்சீய பாஷைகளிலுள்ள கதாப்பிரபந்தங்களை விநோதத்திற்காகவும், பாஷைத் தேர்ச்சிக்காகவும் வாசிப்பதன்றிச் சன்மார்க்க விருத்திக்கும் ஈஸ்வர பத்திக்கும் வாசிப்போரைக் காண்கிலேம். நமதுநாட்டிலும் அவையே அந்நூல்களின் பயனாயின் ஏழைச்சனங்களில் ஈஸ்வரபத்தியும் தெய்வவணக்கமும் முற்றுமற்றுப் போய்விடும். ஆதலால் வேதாகம சாஸ்திரப் பொருள்களைப் புகட்டி ஈசுரபத்தியை விளைத்தற்சென்று செய்யப்பட்ட புராணங்களைத் தனிச் சங்கற்ப பிரபந்தங்களெனக் கூறுதலடாது. சிவபெருமானுடைய திவ்வியாநுக்கிரகத்தினால் பண்டைக்காலத்து நிகழ்ந்த பல கதைகளும் புராணங்களின் பாலுள.

சூத்திராதியோர்க்குப் புராணங்கள் அருளிச்செய்யப்பட்டதும் சிவபெருமான் ஆன்மாக்களிற் கொண்ட கருணையேயாம். பதவிகளும் முத்தியு மடைதற் கின்றியமையாத சரியை, கிரியை, யோக ஞானங்களைப் புராணங்களும் கொடுக்கவல்லனவாயின் அவற்றின் மகிமை யளவிடற்பாலதன்று. வேதநிந்தையும் ஈஸ்வரநிந்தையும் வேறுவேறன்று. வேதப்பொருள் பிரணவநாயகராகிய பரப்பிரமமேயாதலின் ஒன்றன் றூஷணை மற்றதன் றூஷணையேயாம். இதுபற்றியே வேதாகமங்களை அறிவிலார் கைப்படுத்திச் சிவதூஷணைக்குக் காரணராய் நிற்கும் பெரும் பாதகத்திற்கு நமது ஞானிகள் விலக வேதுவாயிற்று. புராணநிந்தை அதனுள் மறைபொருளாய்க் கிடந்த சிவத்தின்மேற் செல்லாதோவெனில், அன்று. இதுவே தனிப்பொருளா யமைந்த வேதாகமங்கட்கும் இருபொருட்பட்ட புராணங்களுக்கும் தம்மிலுள்ள பேதமாம். உண்மறைப் பொருளுணர்வார் சிவநிந்தைபுரியாராதலின் புராணதூஷணை புறத்திற்கிடந்த கதார்த்தமாகிய செம்பொருட்கே செல்லுமெனத் தெளிக.

உட்பொருளுட் பொருளென்றுரைகின்றீர்கள். அதனை விரித்துரைப்பினன்றோ புராணத்தின் மாட்சிமை விளங்குமென்பீர்போலும். நன்று! நன்று!! மனைவி மக்க ளாதியோர்க்கும் மறைத்து அவர்க்குப் பரிபக்குவம் வந்தவிடத்தும் தீக்ஷாபந்தனைகள் முற்றுவித்துக் குருவாயிலாக வோதத் தக்கனவற்றை, நமது சைவசாத்திரக் கொள்கை யிதுவென வறிந்தோர் அவ்வாறு வினவுதல் வியப்பே. கிரமப்பிரகாரம் விவாசம்பேசுவித்து நிச்சய தாம்பூலம் பரிமாறி நன்முகூர்த்தத்திற் பாணிக் கிரகணஞ்செய்து பின்னருந் தக்க காலமு மிடமு மியைந்துழி, ஓர்கன்னிகையின் அவயவங்களைப் பார்த்தல் ஆடவனொருவனுக்குக் கூடியதும் முறையுள்ளதாயுமிருக்கும். ஆயின் முககரசரணங்களை மூத்தார்பால் நிற்குங்கால் நோக்குதல் முறைகேடாகாது. அதுபோலப் பரிபக்குவமடையாதார்க்கு முரைக்கற்பாலன பலவுள.

சைவர்களுக்குள் நடந்ததோர் கலியாண முகூர்த்தத்தில், தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி சிறிதுடையவராயினும் சிவசமயக் கிரியாபேதங்களையும் அவற்றி னியாயங்களையு மறியாத ஓர் கிறிஸ்துசமயி வந்திருந்தார். கலியாணப்பந்தருக் கதிதூரத்திருந்தவராதலின் திருமணப்பீடமுன்னர்ச் சாஸ்திரப்படி நடந்த கிரியைகள் அவர்கண்ணுக் ககப்படவில்லை.

நாயகனும் நாயகியு முறைப்படி பந்தர்ப் பிரதக்ஷிணஞ் செய்து மணவாளன் நாயகியின் பாதத்தைத் தன் கைகளாற்றூக்கி யோரம்மியின்மீது வைத்து மேலே பந்தர்த் துவாரவழியாய் ஒருநட்சத்திரத்தைப் பார்ப்பித்தபோது அக்கிரியைகளின் குறிப்புப்பொருளுணராது சீச்சீ! இஃதென்ன? பெண்ணுடைய பாதத்தை நாயகன் கைகளாற் பிடிக்கிறதா? அதையும் மிளகாயரைத்த அம்மிமேல் வைக்கிறதா! இதுகாறும் பந்தருள் வைத்துப் புகைப்பித்துக் கடைசியில் அம்மியைக் காட்டி விட்டது அடுப்பும் அம்மியுந்தான் உனது கெதியென்று தன்னைநம்பி வந்தவளுக்குக் காட்டவா? இதென்ன அவலெட்சணமென் றிகழ்ந்தபோது, பக்கத்திலிருந்த ஓர் சைவப்பிரபு நீர் சற்ற இலக்கியப் பிரமாணங்களாலாவது இதற்குப் பொருள் படைக்கமாட்டாமற் போனீரா? கற்புநெறிதவறிச் சிலைரூபமான அகலிகையை அக்கருங்கல்லும், அந்நிலையின் விசேஷத்தால் மிகுமாண்புபெற்று யாவர்க்கும் மேலாக விண்ணில் விளங்கும் அருந்ததியை வானத்திற் காட்டிய நட்சத்திரமும். அவள்பாதம் அகலிகைசாபத்தை விமோசனஞ்செய்த ஸ்ரீராமர் திருவடிகளையும், பாதத்தை நாயகன் தூக்கிவைத்தல் அவள்கற்பிற் சிறிது தவறினும் தானருளுடையனாய் அவள் பாவவிமோசனத்திற்குத் துணைசெய்வதேயன்றி, அவள் கெட்டுப்போதற்குக் காரணனாய் இருக்கமாட்டானென்பதையும், அவனிருகரமும் தன் மெய்யும் மனமும் முழுதுமொத்து நிற்றலையும், தன் பாதத்தை வையாது அவள் பாதத்தை வைத்தது ஸ்ரீராமாவதாரத்தின் முதற்பொருளாகிய விஷ்ணு சிவபெருமானின் பெண்ரூபமான சத்தியென்பதையும், இவற்றாற் கற்புத்தவறின் வருங் கேடும் கற்புடைமையான் வரும் பெருமையும் இன்னவென்பதையும் இது குறிப்பித்தலல்லவா? இன்னும் அக்கினி சாட்சியாய் யன்றி நாம விவாகத்திற் பெண்ணைக் கொடுப்பதும் கைப்பற்றுவதுமில்லை யாதலின் ஆங்கு வளர்த்த அக்கினியின் புகைதான் பந்தருளெழுந்த புகையெனவும் உணர்த்தியவுடனே முன் இகழ்ந்தவர் தமதறிவீனத்தைக் குறித்து மிக வெட்கி "தக்க கிரியை! தக்ககிரியை!! இது மிகச் சிறப்புடையது" எனப் பாராட்டினர். இப்படியே நம் கிரியைகளொவ்வொன்றும் உண்மை யாராயுமிடத்து அதிசயமுமானந்தமும் மெய்யறிவும் கொடுக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

சென்றவருடத்திலே தேகவியோகமடைந்த ஒருபிரபுவின் மனைவியைத் தகனஞ்செய்வதற்காக மயானத்திற் கொண்டுபோய் நம்மாகமத்துக்கியையச் சில கிரியைகள் செய்யப்படுஞ் சமயத்திலே, அப்பிரேதத்திற்கு உரித்துள்ள வொருவர் குடத்தில் நீர்கொண்டு சுற்ற, அக்குடத்தில் நாவிதன் முறையே ஒவ்வோர் துவாரமிடுவதைக் கண்டபின் ஞோர்கிறிஸ்தவர், "இது தற்காலச் சீர்திருத்தத்திற்கு மாறு" எனக் கூற அதைக் கேட்ட ஒருவர், "அப்படியல்ல நமது தேகமாகிய குடத்தில் விசேஷமாய் ஒன்பது துவாரமிருக்கவும், இறுதிவரையு மிவ்வான்மா நீங்காதிருந்த ததிசயமேயன்றி இப்போது பிரிந்த ததிசயமன்று. இம்மட்பாண்டம் தகர்க்கப்படும்போது உள்ளிருக்கும் சலம் ஒழுகுவது நூதனமல்ல. பின் இங்கேவிழுந்துகிடக்கும் இப்பாண்டத்தை யொத்த நம்தேகம் அநித்தியம், இதைக்குறித்து விசனப்படவேண்டாம்." என்பதே இக்கிரியையின் கருத்தெனக் கூறி, இப்படியே சைவசமயிகளது கிரியைகளொவ்வொன்றும் ஆழ்ந்தகருத்துடையன. இது இவ்வாறாக, இழவிற் குடமுடைத்தல் சீர்திருத்தமற்றார் செயலென்று சொல்லும் நீவிர், வாழ்வில்

ஓர்பெண்ணை விவாகஞ்செய்து கொடுத்து வரன் வது இருவரையும் கரத்தையிலேற்றிப் பழஞ்செருப்பெடுத் தெறிவது சீர்திருத்தமெனக் கொண்டததிசயமன்றோ! எனக் கூற அக்கிறிஸ்தவர் தலைகவிழ்ந்து முகஞ்சோர்ந்து போயினர். இதுநிற்க.

சாமானியமாயுள்ள லௌகிகநூல்களாகிய இலக்கணதர்க்காதிகளையேனும் ஒருவன் கற்றறியமுன் அவற்றைக் குறித்து யாதேனுமோர் கருத்தை வெளிப்படுத்தத் துணியான். அவற்றைக் கற்கப் புகுமிடத்தும் அதன்பொருட்டு நியதமாய் முன்னர் வேண்டப்படும் அங்கநூல்களைக் கற்று, பின்னர் தக்க ஆசிரியன் முன்னிலையில் பல நெடுங்காலம்போக்கி அத்தியந்தசிரத்தை தூண்டக் கற்கின்றான். அங்ஙனம் கற்றபின்னும் அந்த நூல்களிலே யாதேனுமோர் வழுத் தெரிக்க என்றால் மிகவும் அஞ்சுகின்றான். லௌகிகநூல்களில் இங்ஙனமாக, இவற்றினும் பலமடங்கு சிறந்தனவும், காடின்னியநெறி பூண்டனவுமாகிய சமயநூல்களையோவென்றால், அவற்றைத் தக்க ஆசிரியன் முன்னிலையில் ஒரு சிறிதுகாலத்துக்காயினும் கற்பதுமில்லை. அவற்றிற்கு முன்னர் வேண்டப்படுவனவாகிய அங்கநூல்களை யாராய்வதுமில்லை. அல்லது அந்தநூல்களைத் தான் ஒருமுறையாவது கிரமமாக வாசித்துணர்வதுமில்லை. சிலர் சொல்லக்கேட்ட மாத்திரையானே அந்நூல்களிலே தம்மனம் சென்றவாறு ஆக்ஷேபங்களைத் தொடுக்கின்றார்கள். சொற்பகால சீவனார்த்தத்துக்குரிய கருவிநூல்களை அதினும் வசனநடையா யுள்ளவைகளாய் வெளிப்படைப் பொருள்கொண்டு கிடக்கும் நூல்களைக் கற்றற்கு ௫. ௬. ௧௦. வருடங்கட்கு Theological School இலே தவறாது கற்றல்வேண்டுமாயின், செய்யுள்நடையிலே தொடுக்கப்பெற்று அணியினாற் பொதிந்து, பொருளினாலாழ்ந்துகிடக்கும் புராணங்களை ஒரு சிறுகாலத்துக்காயினும் கற்றல் வேண்டாது அவற்றிலே ஆக்ஷேபந் தொடுக்கலாமாம். நியாயசாஸ்திர வைத்தியசாஸ்திரங்களை, ௩. ௪. ௫. ௬. வருடங்களாய்க் கற்கவேண்டுமாம். இப்பலசாத்திரங்களையும் தன்னொரு சிறுகூற்றினுள் அடக்கிநிற்கும் சமயசாத்திரத்தைக் கல்லாதே வழுத் தெரிக்கலாமாம். இவர்போலியரைக் குறித்து நாம் சொல்லத்தக்கதென்ன!!! இவர்கள் இவ்வாறு ஆக்ஷேபந் தொடுக்கமுன்னர் அப்புராணகாவியங்களை ஆக்கினாரது நிலையையாவது, அவற்றைக் கைக்கொண்டு அனுசரித்துவந்த பெரியோர்களின் நிலையையாவது அல்லது அப்புராணங்கள் அமைந்துள்ள காலதேசங்களின் நிலையையாவது சிறிதாயினுஞ் சிந்திக்கவேண்டாமா?

இவ்வாறு இலக்கிய இலக்கணங்களைக் கற்கவும் சமயசாத்திரங்களை யாராயவும் ஒருவனுக்கு இலகுவி னமையத்தக்கதன்று. அமையினும் அங்ஙனம் கற்றறிய எத்துணைக்காலஞ் செல்லும்! யாவரும் எளிதிற் கற்றுக்கொள்ளும்படியன்றோ சமயசாத்திரங்களிருத்தல்வேண்டும் எனப் பலர் ஆட்சேபிக்கின்றார்கள். இதற்குச் சமாதானமாய் இந்தியாவிலுள்ள பத்திரிகையொன்றில் ஒருவர் எழுதியதை இவ்விடந் தருகின்றோம்:—“ஒருவன் தன் சீவியகாலத்தில், தன் சீவனார்த்தத்துக்குரிய ஒரு சிறுதொழிலைப் பெறுவதற்காக, இளமைதொட்டுப் பலவருடங்களாய் வெகு பிரயாசத்தோடு கல்வி கற்றபின்பே அங்ஙனம் ஒருதொழிலைச் செய்வதற்குரியனாகின்றான். இங்ஙனம் கற்றபின்னரும், நியாயவைத்தியசாத்திரங்களை யாராயவேண்டில் பின்னும் ௩, ௪, ௫. வருடங்களாய் அவ்வப்பகுதிக்குரி

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

ய கல்விகளை யாராயவேண்டியவனாய் இருக்கின்றான். இப்படியெல்லாம் பலவருடங்களாய்க் கற்றும் கற்றதற்கேற்கப் பெற்ற தொழிலினால் வரும் பிரயோசனமோ அநித்தியமாய் இருக்கின்றது. இவ்வுலக சீவியத்திற் கவனிக்கவேண்டிய பின்னொன்றுளது. வாக்குமனாதீதராகிய கடவுள் பரத்துக்குரிய செய்கைகளையும் அதனாற் சிலர்பெறும் இன்பங்களையும் ஒருவாறு அறிந்துகொள்ளும் வண்ணமே இகத்துக்குரிய செய்கைகளும் அதனால்வரும் சுக துக்கங்களு மமைக்கப்பட்டுள்ளன. இவ்வுலகத்தில் நாமனுபவிக்கவேண்டிய சிற்றின்பமும் நியமிக்கப்பட்ட காலத்திற் பெறுவதன்றி அதற்குமுன் பெறுதல் கூடாது. அப்படியாயின், நித்தியமான பேரின்பத்தைப் பெறுதற்கும் அதைப் பெறுதற்கேற்ற நூல்களையாராய்ந்து அதன்வழியொழுகி அவ்வின்பத்தைப் பெறுதற்கும் மாத்திரைகடோறும் செய்கைகளினாலும் மனதினாலும் மட்டற்ற பாவங்களைச் செய்யும் ஆன்மவர்க்கங்களுக்கு எத்துணைக்காலஞ் செல்லும் என்பதை யாவர் மட்டிடுவர். இப்பிறப்பில் வாய்க்குமோ அன்றி இன்னும் பல பிறவிகளிற் கிட்டுமோ யார்சொல்ல வல்லவர். இதுபற்றியே இந்துக்களது மறுபிறப்பு நிச்சயம் பெரிதுந் தாபிக்கப்படலாம்'' எனக் கூறுகின்றார். இது நிற்க.

புராணங்கள் தொடுக்கப்பட்டுக் கிடக்கும் பாடைநடைத்திறமைதானே அவற்றை இயற்றினார், இலக்கண, இலக்கிய, தர்க்க, சமயஅறிவுகளில் மிகச் சிறந்துளார் என்பதைப் பிறிதொன்றன் உதவிவேண்டாது தாயே காட்டும். இங்ஙனம் திறமைபூண்டார் ''கடவுள் ஒருபெண்ணை விவாகஞ்செய்தார்'' என்பது போன்றதோர் சரித்திரத்தை (அதனைப் பிறிதொரு பொருள்பற்றிக் கூறினாரல்லராயின்) கடவுளிலக்கணத்துக்கு மாறுபடாத பரிசுத்தசரிதம் என்று சிறிதும் கூசாது எடுத்துச் சொல்வாரா! இன்னும் புராணங்கள் இயற்றப்பட்ட காலமோ இந்தியா நாகரிகத்துச்சியில் வதிந்த காலம். இப்படிப்பட்டதொருகாலத்தில் ''சுப்பிரமணியக்கடவுள் வள்ளிநாயகி யாரைக்களவாண்டார்'' என்பதோர் சரித்திரத்தைத் திவ்விய பரிசுத்தசரிதையென்று யாரும் ஒருவர் சொல்லத்துணிவாரா? புராணங்களிற் குற்சிதமேற்றுவார், அக்குற்சிதங்கள் என்று கொள்ளப்படுவனவற்றை வேதவியாசர் போல்வார் சொல்லத்தக்கவர்தாமோ! சொன்னார் என்றால் அதை அவர் இருந்தகாலம் ஏற்கத்தக்கதுதானோ! ஏற்றதென்றாலது என்கருதி! என்ன பொருள்பற்றி! என்ன சம்பந்தத்தில் சொல்லப்பட்டதென்பதை ஆராய்தல்வேண்டும்.

புராணங்களிற் கடவுளிலக்கணம் பேதப்படுமோவெனப் பார்ப்போம். சைவசமயத்துக்குரிய முதனூல்கள் வேதாகமங்களும் வழிநூல்கள் புராணாதிகளுமாம். ''முன்னோர்நூலின் முடிபொருங்கொத்'' திருப்பதே வழிநூலாமாதலின், புராணங்கள் முதனூல்களாகிய வேதாகமங்களின் பொருளோடு சிறிதும் மாறாது, அவற்றைப் பின்னும் வலியுறுத்தி விளக்குவனவாமென்பது செவ்விதிற் போதரும். முதனூல்களாகிய வேதசிவாகமங்களிலே சிவபெருமான் தம்வயத்தராதல் முதலிய குணங்களையுடையரென்று கூறப்பட்டிருக்கின்றது. இவ்விலக்கணங்களையே வலியுறுத்திக் கூறப்புகுந்த புராணங்கள் அவ்விலக்கணங்களைப் பேதப்படுத்துவதெங்ஙனம். வாக்கியப்பிரமாணங்களாய் உள்ள வேதசிவாகமங்களிற் கூறப்பட்டனவற்றை அநுபவப்பிரமாணமாய்க் கூறப்புகுந்த பு

ராணங்களிற்றானே பலவிடங்களில் "ஏவர்தம்பாலுமின்றி எல்லைதீர் அமலற்குள்ள மூவிருகுணனும்" என்றும், "பற்றிகலில்லதோர் பரமன்" என்றும், இன்னும் பலவாற்றால் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கின்றது. இங்ஙனமாக வேதாகமசாஸ்திர வியுற்பன்னர்களாகிய பௌராணிகர் வழிநூல்களெனக் கொண்டியற்றிய புராணங்களில் சிவபெருமான் தாருகாவனத்து இருடிபன்னியர் கற்பை அழித்தார் என்பதுபோன்ற சரித்திரத்தை அதனுக்குத்தக்க சமாதானம் இல்லையாயின், சிறிதும் கூசாது அவற்றை வேதாகமப்பொருளை வலியுறுத்துமோர் சரிதம் என்று சொல்வாரா?

அன்றியும் ஒரு சாதியாருடைய சாத்திரசம்பிரதாயங்களின் கொள்கை இதுவென்று துணியமுன்னர், அவர்கள் எப்படிப்பட்டவர்? அவர் பாஷை எப்படிப்பட்டது? அவர்கள் பேசுவதெப்படி? ஒன்றை விளக்குவதெப்படி? என்பன முதலியவற்றை மூர்ந்த ஆராய்தல்வேண்டும். நம் பரதகண்டவாசிகளைக்குறித்து இங்ஙனம் ஆராயின் நாம் புராணங்களில் மலைதல்வேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் பேசுவது; நினைப்பது, விளக்குவது எல்லாம் பெரும்பாலும் உவமான ரூபகவருணனை கொண்டாம். இவைகள் எல்லாம் அவரது இலக்கியங்கட்குச் சிறந்த இலக்கணங்களாகக் கொண்டு வழங்கப்படும். ஆதலினாலே ஆரிய திராவிடகிரந்தங்கள் அணியினாற் பெரிது புனையப்பட்டுக் கிடக்குமென்க.

இயல்பிலே அணிப்பிரியராகிய இந்தியர் பதிகிருத்தியாதிகளை அணிகொண்டே விளக்கவேண்டிய அவசியம் வந்தவிடத்து என் செய்யார்? வாக்கியவடிவங்களாயுள்ள (Theory) வேதாகமப்பொருள்களை அனுபவவடிவில் (Practice) தந்தாலே சாமானிய சனங்களாயுள்ளார் விளங்குவார் எனக்கொண்டு அவ் வாவசியகம்பற்றியே அப்பொருள்களை, வெகுளி, வீரம், பயம், சிருங்காரம், இழிவு, புகழ், கருணை, வியப்பு, நகை, என்னும் காவிய நவரசத்துட்பொதிந்து அணிகொண்டலங்கரித்துப்புராணவடிவிற்றந்தார். ஆகவே புராணங்களினுண்மைப்பொருள்களை இலக்கண இலக்கிய தர்க்கங்களிற் பயின்று சமயசாத்திரங்களைத் தக்க ஆசிரியர்பாற் கற்றுக் கண்டறிந்தாலன்றி அறிதல்கூடாது. இங்ஙனமாதலின் முகம் பழுதாயின் கண்ணாடியிற் குற்றமேற்றுதல் அழகன்று.

யாதாயினுமொரு விஷயத்தை விளக்கப் புகுங்கால் அதனைத் திருட்டாந்தமுகத்தாலும், உருவகாதிவருணனைகளாலும், விளக்குவதும், அங்ஙனம் விளக்குங்கால் எடுத்துக்கொண்ட விடயம் கேட்போர்க்கு இனிது புலப்படுதலும் ஒருதலையன்றோ? இங்ஙனமே புராணங்களும் பதிகிருத்தியங்களை எடுத்துக் கூறுமிடத்து அவற்றை உருவகித்து அணிப்படுத்திவிளக்குமாம். இவ்வுருவகங்களிற் சிற்சில இடங்களிலே சொல்லுருவக மாத்திரத்தினமையாது உருவகச்செய்கைகளுமாம். அஃதாவது பதிகிருத்தியாதிகள் உருவகிக்கப்பட்டு அவ்வுருவகமுறையே சம்பவநிகழ்ச்சிகளும் நடந்தேறியவாம். பிரபஞ்சத்திலே நிகழும் எந்தெந்த நிகழ்ச்சியினும், பிரமஞானத்தை ஆன்மாக்கட் கூட்டுதல்வேண்டுமெனத் திருவுளங்கொண்டு, கடவுள், அவ்வந்நிகழ்ச்சிகளினெல்லாம் ஓர் ஓர் பதிஞான அருத்தத்தை வெளிப்படையாயும் குறிப்பாயு மமைத்திருக்கின்றார். இப்பிரபஞ்சந்தானே பிரமசொரூபமாகச் சிருட்டிக்கப்பட்டுள்ளது. இதுபற்றியே அண்டமும் பிண்டமும் ஒன்றை ஒன்றொக்குமெனச் சாத்திரங்க

ள் கூறுவது. இம்மையிலே நாமனுபவிக்கும் சிற்றின்பந்தானும் பேரின்பத்திற் கறிகுறியாகவே யமைக்கப்பட்டுள்ளது. இவ்வேதுபற்றியே, பதியை நாயகனாகவும், ஆன்மாவை நாயகியாகவும் சாத்திரங்கள் பாவிப்பதும் திருக்கோவையார்முதலிய ஞானநூல்களிலே பதிநாட்டத்தைச் சிற்றின்பலீலாவடிவில் எடுத்துக் கூறியதுமென்க. அஃதன்றி, பெறுதற்கரிய மந்திரியுத்தியோகத்தையும் பொருட்படுத்தாது வெறுத்துத்தள்ளி இல்லறத்தை நீக்கி மகாஞானியாய் விளங்கி நாமெல்லாம் கதியடையுமாறு நமக்கு அத்திய அற்புத மதுரவாக்காகிய திருவாசகத்தைத் தந்தருளிய மாணிக்கவாசகசுவாமிகள் சிற்றின்பமேலீட்டினாலே தம் திருக்கோவையாரைச் செய்தருளினார் என்று யார் சொல்லத்துணிவர். கந்தபுராணத்துக் கூறப்பட்டிருக்கும் வள்ளிநாயகியார் திருமணச்சரித்திரத்தையும் இவ்வுருவகசம்வாயிலாகவே பொருள்கொள்ளவேண்டுமென்றறிக. அக்கினியிற் சூடுபோலச் சிவத்தைவிட்டு நீங்காத சத்தியும் "உருவகச்செயல்" என்னும் இந்த நியாயம்பற்றியே பெண்ணுருக்கொண்டு சிவபெருமானது வாமபாகத்து வீற்றிருக்கும்முறையாய்க் கூறப்பட்டுள்ளது. இன்னும் பிரபஞ்சத்திலே நிகழ்ந்த பற்பல இயற்கை நிகழ்ச்சிகளாய பூதபரிணாமங்களும், இயக்கங்களும், திரிபுகளும் உருவகப்படுத்தப்பட்டே, பூமியை அசுரன்கொண்டோடினான், வருணனும் வாயுவும் யுத்தஞ்செய்தார், விஷ்ணுமூர்த்தி ஆமைவடிவாய்ப் பூமியைச் சமஞ்செய்தார் என்பனமுதலிய சரித்திரங்களாகப் புராணங்களிற் கூறப்பட்டுள்ளன. உருவகச்செயல்கள் இப்படியாக, இனி உருவகவாக்கியங்களானும் பல புராணசரித்திரங்கள் எடுத்துப் பேசப்பட்டிருக்கும். சிவபெருமான் தமது சத்தியோடு உத்தியோகித்துக் கிருத்தியநடாத்து முறையே அவரது புணர்ச்சியென்று வருணித்துப் பேசப்படும்.

இனி உருவக சரித்திரங்கள் இங்ஙனமாக வேறு பல உண்மைச் சரித்திரங்களினும், அவற்றின் நோக்கம் இயைபுமுதலியவற்றைக் குறியாது பலர் மயங்கி உலைகின்றார். ஒருவனது செய்கை எப்போதும் அவன் நோக்கத்திலிருந்தே நிச்சயித்துணரவேண்டும். ஒருவைத்தியன் ஒருநோயாளியை ஆயுதங்கொண்டு வெட்டுவதும் பின்னொருவன் தனக்குள்ள பகைபற்றி ஒருவனை வெட்டுவதும், சொல்லளவில் சமமேயாயினும் நோக்கத்தளவில் இரண்டனுக்கும் மிகப் பேதமுண்டு. சிவபெருமான் தாருகாவனத்து இருடிபன்னியர் கற்பை அழித்தார் என்றமைமுதலிய சரித்திரங்களை அவரது நோக்கம்பற்றி நோக்குவோமெனின் அவற்றின் பெருமை பெரிது புலப்படும். இதனைக் கோயிற்புராணம் சிவதூஷணகண்டனம் முதலியவற்றுட் காண்க. கற்பை அழித்தார் என்ற சொல்லளவில் குற்றமென்று சாதிக்குமவர், கடவுளே சிருட்டி திதி சங்காரம் மூன்றையும் செய்கின்றவர் ஆதலின் சங்காரத்தைச் செய்தலினால் சொல்லளவிற் கொண்டு அவரைக் கொலைப்பாதகரென்று கூறத் துணியாததேனோ!

இனிப் புராணங்கள் சாத்திரக்கொள்கைக்கு மாறுபடுமோவென்பதனைச் சிறிதாராய்வாம். புராணங்களிலே பூகோள ககோளாதி சாத்திரத் துணிபுகட்கு மாறாய்ப் பல கூற்றுக்களுண்டென்பது சிலர் கருத்து. இப்பூகோளாதி சாத்திரசம்மதங்கள் பௌராணிகராய வேதவியாசர் அறிவுக்கு அந்நியமானவைகளல்ல. இந்த வேதவியாசரே தாமியற்றிய

வியாச சித்தாந்தம் முதலிய சோதிசாத்திரநூல்களிலே இப் பூகோள ககோளாதி சாத்திர விருத்தாந்தங்களை விரித்துக் கூறியிருக்கின்றார். இவரியற்றிய பதினெண்புராணங்களுள் ஒன்றாய கூர்மபுராணத்திலே இச்சாத்திரக்கொள்கைகளுட் பல உள்ளபடி எடுத்தோதப்பட்டுக் கிடக்கின்றன. இக்கொள்கைகளெல்லாம் இப்போது புதிதாக வாராய்ச்சியில் தலைப்பட்டுள்ள மேலைத் தேசவாசிகட்கு நவீனமாகத் தோன்றுவனவன்றி நம்புராதன ஆசிரியர்க்கு அவை யாவும் பழம்பாடங்களாம். ஒருபுராணத்தில் ஒருவாறாகவும் மற்றொருபுராணத்தில் பின்னொருவாறாகவும் கூறப்பட்டமைக்குரிய காரணத்தை நோக்காது புராணங்களைச் சாத்திரவிருத்தமென்று கொள்ளல் பேதைமை. ஆரியசமய நூல்களை யாராய்தலின்கண்ணே தமதுகாலத்தைப் போக்கிய Max Muller முதலியவர் கருத்துக்கும் அங்ஙனம் ஆராயாத பரசமயிகள் கருத்துக்கும் எத்துணை வித்தியாசமுண்டு. இப்பரசமயிகள் ஒருமுறையாவது உள்ளவாறு இப்புராணங்களை யாராய்ந்திருப்பாராயின் தாம் பொறிக்கு மாக்ஷேபங்களுக்கெல்லாம் விடை யங்கங்கே யிருத்தலைக் காணாதுவிடார். வள்ளிநாயகியாரைக் களவாண்டாரென்றும் ஆகையால் அவர் கடவுளோ என்பர். அந்தப் புராணத்து அந்தப்படலத்திலே அச்சரித்திர சம்பந்தத்திற்றானே "உலைப்படு மெழுகதென்னவுருகியேயொருத்திகாதல் - வலைப்படுகின்றான்போலவருந்தியேயிரங்காநின்றான் - கலைப்படுமதியப்புத்தேள்கலங்கலம்புனலிற்றோன்றி - அலைப்படுசீர்மைத்தன்றோவறுமுகனுடலெல்லாம்." என்றும் இன்னமு மிவ்வாறே சொல்லப்பட்டிருக்கும் பல கூற்றுக்களைக் கண்டிருப்பாராயின் கண்ணைமூடிக்கொண்டு கண்டவாறு ஆக்ஷேபந்தொடுப்பாரா? இங்ஙனமே புராணங்கள் சாத்திரக்கொள்கைகளோடு முரணும் என்னும் இவ்வாக்ஷேபத்துக்கும் புராணத்திலே தக்க சமாதானம் அமைந்திருக்கின்றது.

"வேதமொடுதந்திரமுமவற்றின்சார்பும்மிருதிகளும்பிறநூலும்வேறுவேறாம்- ஓதிடுமண்டத்தியற்கைமலைவோவென்றாலுண்மைதெரிந்திடிற்படைப்புமளப்பில்பேதம்." என்று கூறப்பட்டிருத்தற் கியையவே "ஏதிலாக்கற்பமெண்ணிலசென்றன-ஆதலாலிக்கதையுமனந்தமாம்" என்று கந்தபுராணங் கூறுவது. முந்தொருகாலத்து நிகழ்ந்த சிருட்டி விருத்தாந்தத்தை எடுத்துக் கூறிய கூற்றை இக்காலத்துக்கு அமைத்து அதன்கண்ணே வழுத்தொடுக்கப் புகுதல் அறியாமையன்றோ' பிறபுராணங்களிலே சிருட்டி பின்னொருபடித்தாய்க் கூறப்பட்டுள்ளமையானும், சோதி சித்தாந்தங்களிலே தற்காலச் சிருட்டியின் விரிவு கூறப்பட்டிருத்தலினாலும் கந்தபுராணத்துக் கூறப்பட்டது, முந்தொருகாலத்து என்பது தானே போதரும். இதுவன்றி இந்தியாவுக்கு இடையறாது தொடர்ச்சியுள்ள தேச இதிகாச சரித்திரங்களோ இல்லை. இதனானுந் தொடர்பின்றி முன்னேது பின்னேதுவென்று தெரியாமலும், தெரிந்தவிடத்தும் காலவரையறை யில்லாமையாலும் கண்டியெங்கே பூமியிலே, பூமியெங்கே சூரிய சமஸ்காரத்திலே, சூரியனெங்கே, ஆகாயமத்தியிலே, ஆகாயமெங்கே இங்குமங்கு மெங்குந்தான் என்பதுபோலவும் திரேதாயுகக் கதையிது, திரேதாயுகக்கதை யிதுவென்று வழங்கும் பலகதைகளுண்டு.

ஆதலால் அன்பர்களே! நிகழ்ந்த சங்கதிகளை யடியிட்டு அதன்மேற் புலவர்பெருமான்கள் தமதலங்கார சிருட்டிகளைப் பூட்டி இலக்கிய இலக்கண தர்க்க கலைஞானச் சாந்துக்களா னன்குகூட்டி, சங்கற்ப சித்திரங்க

ளைத்தீட்டி அவற்றின் பாகங்தோறும் ஆங்காங் கியைந்தபடி வேத சிவாகமப்பொருளை உள்ளே மறைய நாட்டி, அப்பொருள்களின்மேல் பல வருணத்திரைகளை மாட்டிக் கண்ணுங் காதும் மனமுங் குளிரக் கோட்டை கோபுர மாட மாளிகைகளோடு சிவத்துவசங்கட்டிய புராணபுரிகளை, அறிந்தஅவருதவியோடு சென்றடைந்து எங்குஞ் சுற்றிப்பார்த்து அங்கே செய்யப்பட்ட ஒவ்வொரு சித்திரங்களையும் அவற்றின் குறிப்புகளையும் தீரவறிந்துகொண்டபின்னரே அவற்றின் குறைநிறைகளைப் பேச முயலுங்கள். காண்பதுமில்லைக் கண்டார்பேச்சை நம்புவதுமில்லை, குற்றமே குற்றமென்று பிராந்திவயத்தராய் ஓலமிட்டுழல்வார்க்கு நாம் சொல்லத்தக்கதொன்றுமில்லை. சைவபுராணங்கள் அவற்றின்பொருளை யறியாதார்க்கு ருசியாததும் பயன்கொடாததும் எதுபோலவெனில், பலபிணியால் வருந்தியும், அந்நோய்களைப் பரிகரிக்கத்தக்க அருமருந்துகளைச் செவ்வே வகுத்தியற்றிய வாகடத்தை வாசித்தும் அதிற்கூறிய மருத்துப் பூண்டுகளின் பெயர்களை ஒலிமாத்திரத்தாற் கண்டதன்றி அவை குறிக்கும் பொருள்களிவையென அறியாமையாற் பிரயோசனமடையாததை யொக்குமென்க. நம்சமயசாத்திரங்களி லநேகவுண்மைகள் அநுபவத்தினாலன்றி அறிதற்கூடாதவையாய் இருக்கின்றன. அவற்றை நூல்வழியாயாவது சொல்மாத்திரையினாலாவது விளக்குதல்கூடாது. இனி அவ்வனுபவமோ ஏதொன்றிலாவது விதித்தபடி நெடுங்காலம் மனத்தைப் பழக்கிவந்தாலன்றிப் பிறவாது. கரும்பைத்தின்றவன் அதைத்தின்னாதவொருவனுக்கு அதன் ருசியைச் சொல்லி விளக்குதல் எப்படி. அக்கரும்பைத்தின்னா வொருவனும் கரும்பைத் தின்பதன்முன் அதன் ருசியையறிதல் எப்படி. நம் சமயசாத்திரங்கள் விதித்தபடி யொழுகி நெடுங்காலம் பயின்று பெறும் அனுபவத்தையொழித்து அச்சுப் பிரதிகள் மலிந்துகிடக்கின்றன வாதலால் அவற்றை வாய்ப்பாடம் பண்ணிக்கொண்டு சமயத்திற் குற்றம்சுமத்துவோரும், அவ்வாறு குற்றம்சொல்வோரை நம்பிப் பின்பற்றுவோரும் யாரென எண்ணத்தக்கவர். யாரும் விளங்கக்கூடிய சரித்திரங்களைப் பொதிந்த விவிலியத்தைத் தானும் போதிக்கப் புறப்படுமுன் குறிக்கப்பட்ட காலம்வரைக்கும் படித்தே "போதகர்" பட்டம் பெறவேண்டுமானால் சமுத்திரம்போலப் பெருகி அதன் ஆழத்தை யொத்த ஆழ்ந்தகருத்துக்களையுடைய நமது சாத்திரங்களைப் பொள்ளென விளங்குஞ் சத்தி எவரிடத்துண்டு.

முற்றிற்று.

## கொழும்புச் சைவப்பிரகாச சபையின்
## நிர்ணயசபையார்

---

ஸ்ரீ. பொ. குமாரசுவாமிமுதலியார் (Proctor S. C. M. M. C.) அக்கிராச
,, சு. கதிர்வேற்பிள்ளை (Shroff. N. O. B. C) உப அக்கிராசனர்.
,, இ. நன்னித்தம்பிமுதலியார்.
,, சி. நமசிவாயமுதலியார்.
,, சி. மயிலுப்பிள்ளைமுதலியார் (Shroff Mercantile Bank)
Hon. பொ. இராமநாதத்துரை (C. M. G. M. L. C. Barrister at Law.)
ஸ்ரீ. பொ. அருணாசலத்துரை (M A. C. C. S. District Judge.)
,, க. இராமலிங்கபிள்ளை (Shroff Madras Bank)
,, இ. சி. சேனாதிராஜா (L. L. D. Barrister-at-law)
,, க. தம்பையாபிள்ளை (Shroff, National Bank) இலிகிதர்.
,, வே. சங்கரப்பிள்ளை (Broker.)
,, சீ. இராமலால் மகாராஜா (Broker.)
,, த. கங்காகுலரத்தினம் (Broker.)
,, த. சுப்பிரமணியபிள்ளை.
,, ந. இரத்தினசபாபதிப்பிள்ளை (Broker.)
,, த. சண்முகபிள்ளை (Broker.)
,, ந. தியாகராஜா (Barrister-at-law)
,, த. முருகேசபிள்ளை. (Broker)
,, பெ. நாராயணசாமிப்பிள்ளை (Proctor D. C.)
,, ஐ. அம்பலவாணபிள்ளை (Proctor D. C.)
,, அ. நாகநாதபிள்ளை (Broker.)
,, க. நமசிவாயபிள்ளை (Shroff C. G. R.) தனாதிபர்.
,, பொ. கந்தையா.
,, மா. செல்லையா.
,, வி. பொன்னம்பலபிள்ளை (Merchant)
,, வே. செல்லத்துரை.
,, செ. சுப்பிரமணியபிள்ளை.
,, ரா. ம. அரு. அரு. சுப்பிரமணியஞ்செட்டியார்.
,, பெ. லெ. பெ. குழந்தைவேலன்செட்டியார்.
,, சி. செல்லையா உபஇலிகிதர்.
,, வ. தம்பிப்பிள்ளை (Broker)
,, மு. சரவணமுத்து (Broker)
,, அ. குலவீரசிங்கம் (Clerk A. Scott & co.)
,, த. சொக்கநாதர் (Broker)
,, ச. ஆசைப்பிள்ளை (Merchant.)

சஅக்கக வருஷ புரட்டாசி மீ எவ கூடிய நிர்ணய சபையாராற் றெரிவுசெய்யப்பட்டவர்கள்.

## நிருவாகசபையார்.

---

ஸ்ரீ. பொ. குமாரசுவாமிமுதலியார். (Proctor S. C. M. M. C.) அக்கிராச
,, சு. கதிரவேற்பிள்ளை. (Shroff N. O. B. C.) உபஅக்கிராசனர்
,, க. தம்பையாப்பிள்ளை. (Shroff N. B.) இலிகிதர்.
,, க. நமசிவாயபிள்ளை. Shroff (C. G. R.) தனாதிபர்.
,, சி. செல்லையா. (உபஇலிகிதர்.)